அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
International Institute of Tamil Arts

# தமிழ்க்கலைத் தேர்வு - 2022

பாடம்: நடனம் (பரதம்) தரம்: ஏழு

(ஆற்றுகைத்தரம்)

**நேரம்: 210 நிமிடங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

## பகுதி ஒன்று

**பகுதி 1 இல் முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்கும், பகுதி 11 இல் முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

1. அ. "ஆனந்தக் கூத்தனின் தாண்டவ தரிசனம் ஆனந்தம் ஆனந்தம்" இக்கூற்றின் பொருத்தப்பட்டினைத் தந்து, அவர் ஆனந்தத் தாண்டவம் ஆடிய சந்தர்ப்பம் இரண்டினைச் சுருக்கமாகத் தருக.

   ஆ. ஆடற்பெருமான் ஆடிய பஞ்ச கிருத்திய பரமானந்த தாண்டவம் எழுவகைத் தாண்டவங்களாக உருவாகிய முறைமையை அட்டவணைப்படுத்துக. (ஆடிய இடம், சபை உட்பட)

   (20 புள்ளிகள்)

2. பின்வரும் கலைச்சொற்களை விளக்குக.
   அ. மிருதங்க யதி
   ஆ. ஒளி அமைப்பு
   இ. அரங்கப்பிரவேசம்
   ஈ. பாடக்குறிப்பு
   உ. குருபக்தி (15 புள்ளிகள்)

3. அ. குறவஞ்சி நடன நாடகத்தின் தத்துவச் சிறப்பினையும், அதன் கதை அமைப்பு, நடன நாடக அமைப்பினையும் தருக.

   ஆ. உமக்குத் தெரிந்த பிரசித்தி பெற்ற குறவஞ்சி நாடகங்கள் சிலவற்றைத் தருக.

   (15 புள்ளிகள்)

4. தென்னிந்தியக் கலைவடிவமான பரதநாட்டித்தினையும், பிற இந்திய நடன மரபான மணிப்புரி நடனத்தினையும் ஒப்புநோக்கி ஆராய்க.
   (வரலாறு, தத்துவம், நடன இசை, ஒப்பனை போன்ற அம்சங்கள் இடம்பெற வேண்டும்)

   (15 புள்ளிகள்)

(ம.ப.பா)

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
International Institute of Tamil Arts

# தமிழ்க்கலைத் தேர்வு - 2022

பாடம்: நடனம் (பரதம்) தரம்: ஏழு

(ஆற்றுகைத்தரம்)

நேரம்: 210 நிமிடங்கள் (இரு பகுதிகளுக்கும்)

## பகுதி இரண்டு

**முதலாவது வினா உட்பட மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.**

1. அ. பாரம்பரிய கற்பித்தல் முறைமைக்கும், நிறுவனமய இன்றைய கற்பித்தல் முறைமைக்கும் இடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை இனங்கண்டு விளக்கி உமது கருத்துக்களைத் தருக.

   ஆ. பரதம் கற்கும் மாணவர்களின் தரம் (தராதரம்) குறைவடைவதற்கான காரணங்களைக் கூறி, அவற்றை நிவர்த்தி செய்வதற்குரிய உமது முன்மொழிவுகளைச் சுருக்கமாகத் தருக. (20 புள்ளிகள்)

2. சாஸ்திரிய பரதத்தில் தனிநபர் ஆடலிலும் பார்க்க, குழு பரத நடனங்கள் இலகுவில் மக்கள் மனதைக் கவருகின்றன. அத்துடன் மாணவரின் ஆளுமையையும் வளர்க்கின்றன. இக்கூற்றினை விளக்கி உமது கருத்துக்களைத் தருக. (15 புள்ளிகள்)

3. மிஸ்ரஜாதி மட்டிய தாளத்தில் நான்கு ஆவர்த்தனங்களுக்கு குறையாத கோர்வை ஒன்றினை கோபுச்சயதியில் நிறைவுறுமாறு தாளாங்கக் குறியீட்டில் எழுதுக. (15 புள்ளிகள்)

4. இறுவட்டுக்கள், இணையத்தளங்கள் வாயிலாக பரதக்கலையைப் பயில்வது நிறைவான கற்றலை கற்கும் மாணவர்களுக்கு வழங்கும் அல்லது வழங்கமுடியாது. இந்த இருபக்கக் கருத்துக்களையும் உமது நோக்கில் தருக. (15 புள்ளிகள்)